| 149 | ஊர்காவற்றுறை | யாழ்ப்பாணம் | 8-00 | 780 | ஊர்காவற்றுறை - புளியங்கூடல் - துறையூர் - வேலணை யாழ்ப்பாணம் மீ தி. ஊ; |
| | ஊர்காவற்றுறை | வேலணை | 11.45 | 780 | ஊர்காவற்றுறை-புளியங்கூடல்-துறையூர்- வேலணை |
| 150 | ஊர்காவற்றுறை | யாழ்ப்பாணம் | 7-30, 11-00 | 777 | ஊர்காவற்றுறை நாரந்தனை-அராலிசந்தி- யாழ்ப்பாணம் மீ. தி. ஊ; |
| 151 | யாழ்ப்பாணம் | ஊர்காவற்றுறை | 7-30, 11-00 | 777 | யாழ்ப்பாணம் - அராலி சந்தி - நாரந்தனை - ஊர்காவற்றுறை மீ. தி. யா |
| 152 | யாழ்ப்பாணம் | வேலணை | 7-30, 11-00 | 750/1 | யாழ். -அராலிசந்தி-வேலணை மீ. தியாழ். |
| 153 | வேலணை | யாழ்ப்பாணம் | 7-00,10-15,12-45 | 776/1 | வேலணை-சாட்டி-யாழ்ப்பாணம் மீ. தி. வே. |
| 154 | குறிகட்டு வான் | யாழ்ப்பாணம் | 7-30 | 776 | குறிகட்டுவான் - புங்குடுதீவு - வேலணை - யாழ்ப்பாணம் மீ. தி. கு. |
| | குறிகட்டுவான் | வேலணை | 12-30 | 776 | குறிகட்டுவான்-புங்குடுதீவு-வேலணை |
| 155 | குறிகட்டுவான் | யாழ்ப்பாணம் | 8-30 | 776 | குறிகட்டுவான் - புங்குடுதீவு - வேலணை - யாழ்ப்பாணம் மீ. தி. கு. |
| 156 | மண்டைதீவு | யாழ்ப்பாணம் | 7-30,10-00,12-00 | 781 | மண்டைதீவு-யாழ்ப்பாணம் மீ. தி. மண். |
| 157 | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 8-00 | 750 | யாழ்ப்பாணம் -அச்சுவேலி - நெல்லியடி - பருத்தித்துறை மீ தி. யாழ். |
| | யாழ்ப்பாணம் | சுழிபுரம் கிழக்கு | 12-15 | 736 | யாழ்ப்பாணம்-மானிப்பாய்-சித்தங்கேணி-சுழிபுரம் கிழக்கு மீ. தி. யாழ் |
| 158 | யாழ்ப்பாணம் | சுழிபுரம் கிழக்கு | 7-30 | 736 | யாழ்ப்பாணம் -மானிப்பாய்- சித்தங்கேணி - சுழிபுரம்கிழக்கு மீ. தியாழ். |
| | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 10-00 | 750 | யாழ்ப்பாணம் - அச்சுவேலி-நெல்லியடி-பருத்தித்துறை மீ. தி. யாழ் |
| 159 | யாழ்ப்பாணம் | இளவாலை | 7-15, 10-00 | 789 | யாழ்ப்பாணம்-அராலி- வட்டுக்கோட்டை -சித்தங்கேணி-பண்டத்தரிப்பு-இளவாலை மீ. தி. யாழ். |
| 160 | யாழ்ப்பாணம் | இளவாலை | 7-45, 10-15 | 788 | யாழ்ப்பாணம் - மானிப்பாய் - சண்டிலிப்பாய் - தொட்டிலடி-பண்டதரிப்பு-இளவாலை மீ. தி. யாழ் |
| 161 | இடைக்காடு | யாழ்ப்பாணம் | 7-05, 9-40 | 750/1 | இடைக்காடு-அச்சுவேலி-கோப்பாய்-யாழ்ப்பாணம் மீ. தி. இ. |
| 162 | அச்சுவேலி | யாழ்ப்பாணம் | 7-15, 9-30 | 986 | அச்சுவேலி - தோப்பு - நிலாவரை - இராஜவீதி-யாழ்ப்பாணம் மீ. தி. அச் |
| 163 | யாழ்ப்பாணம் | கைதடி | 9-00,11-00,1·35 | 769 | யாழ்ப்பாணம்-கோப்பாய்-நவாற்குழி-கைதடி மீ. தி. யாழ் |
| 164 | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | 7-30,10-00,12.00 | 771 | மருதனாமடம் - மானிப்பாய் - தாவடி - யாழ்ப்பாணம் மீ. தி. மருத. |
| 165 | சங்கானை | யாழ்ப்பாணம் | 8-00,10-15 1-10 | 789 | சங்கானை - சங்கானை வைத்தியசாலை - யாழ்ப்பாணம் மீ. தி. சங். |
| 166 | யாழ்ப்பாணம் | நவாலி | 8-00, 11-00 | 786/1 | யாழ்ப்பாணம் -குளப்பிட்டி - ஆனைக்கோட்டை - நவாலி மீ. தி. யாழ். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | ...சித்தங்கேணி-பண்டதரிப்பு-இளவாலை மீ.தி.யாழ். |
| 160 | யாழ்ப்பாணம் | இளவாலை | 7-45, 10-15 | 788 | யாழ்ப்பாணம் - மானிப்பாய் - சண்டிலிப்பாய் - தொட்டிலடி-பண்டதரிப்பு-இளவாலை மீ.தி.யாழ் |
| 161 | இடைக்காடு | யாழ்ப்பாணம் | 7-05, 9-40 | 750/1 | இடைக்காடு-அச்சுவேலி-கோப்பாய்-யாழ்ப்பாணம் மீ. தி. இ. |
| 162 | அச்சுவேலி | யாழ்ப்பாணம் | 7-15, 9-30 | 986 | அச்சுவேலி - தோப்பு - நிலாவரை - இராஜவீதி- யாழ்ப்பாணம் மீ.தி.அச் |
| 163 | யாழ்ப்பாணம் | கைதடி | 9-00,11-00,1·35 | 769 | யாழ்ப்பாணம்-கோப்பாய்-நவாற்குழி-கைதடி மீ.தி.யாழ் |
| 164 | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | 7-30,10-00,12.00 | 771 | மருதனாமடம் - மானிப்பாய் - தாவடி - யாழ்ப்பாணம் மீ. தி. மருத. |
| 165 | சங்கானை | யாழ்ப்பாணம் | 8-00,10-15 1-10 | 789 | சங்கானை - சங்கானை வைத்தியசாலை - யாழ்ப்பாணம் மீ.தி.சங். |
| 166 | யாழ்ப்பாணம் | நவாலி | 8-00, 11-00 | 786/1 | யாழ்ப்பாணம் -குளப்பிட்டி - ஆனைக்கோட்டை - நவாலி மீ.தி.யாழ் |
| 167 | மாதகல் | யாழ்ப்பாணம் | 7-45,10-30 | 787 | மாதகல்-பண்டத்தரிப்பு -சித்தங்கேணி-சங்கானை சண்டிலிப்பாய்-மானிப்பாய்-யாழ்ப்பாணம் மீ.தி.மாத. |
| 168 | யாழ்ப்பாணம் | மாதகல் | 7-45,10-15 1-30 | 787 | யாழ்ப்பாணம் - மானிப்பாய்- சண்டிலிப்பாய் -சங்கானை-சித்தங்கேணி-பண்டத்தரிப்பு-மாதகல் மீ.தி.யாழ் |
| 169 | யாழ்ப்பாணம் | வடக்கு புன்னாலைக்கட்டுவன் | 7-50,9-30,12-00 | 764 | யாழ்ப்பாணம் – திருநெல்வேலி–உரும்பிராய்- வடக்கு புன்னாலைக்கட்டுவன் மீ.தி.யாழ் |
| 170 A,B | யாழ்ப்பாணம் | தெற்கு புன்னாலைக் கட்டுவன் | 7-35,8-50, 9-00 10-15,11-00,12 45,1-45 | 764 | யாழ்ப்பாணம்-திருநெல்வேலி-உரும்பிராய் - தெற்கு புன்னாலைக்கட்டுவன் மீ.தி.யாழ் |
| 171 | யாழ்ப்பாணம் | உரும்பிராய் | 7-20,8-45,10-30 11-30,1-40 | 764 | யாழ்ப்பாணம்-திருநெல்வேலி-உரும்பிராய் மீ.தி.யாழ் |
| 172 | யாழ்ப்பாணம் | மகாஜனா | 8-45, 12-00 | 768 | யாழ்ப்பாணம்-சுன்னாகம்-கந்தரோடை- மாசியப்பிட்டி-மகாஜனா மீ.தி.யாழ் |
| 173 A.B.C | தெல்லிப்பளை | யாழ்ப்பாணம் | 7-05,8-00, 8_50 10-15,10-45 1 00 | 769 | யாழ்ப்பாணம்- கொக்குவில்- சுன்னாகம்- தெல்லிப்பளை மீ.தி.யாழ் |
| 174 | குப்பிளான் | யாழ்ப்பாணம் | 7-30.9-20,11--20,1-20 7-35,10-00,1-00 | 770 | யாழ்ப்பாணம்-கொக்குவில்-சுன்னாகம்-மல்லாகம்-குப்பிளான் மீ.தி.யாழ் |
| 175 | தெல்லிப்பளை | யாழ்ப்பாணம் | 7-15, 10-00 | 764 | தெல்லிப்பளை-சுன்னாகம்- புன்.ட்டுவன்- யாழ்ப்பாணம் மீ.தி.தெல் |
| 176 | இளவாலை | யாழ்ப்பாணம் | 7-25, 10-45 | 798 | இளவாலை-விளான்- அளவெட்டி- மல்லாகம் - சுன்னாகம்-கொக்குவில் -யாழ்ப்பாணம் மீ.தி. இள |
| 177 | தெல்லிப்பளை | யாழ்ப்பாணம் | 8-00, 10-45 | 768 | தெல்லிப்பளை- மாசியப்பிட்டி-சுன்னாகம் - யாழ்ப்பாணம் மீ. தி. தெல் |
| 178 | யாழ்ப்பாணம் | சில்லாலை | 8-30, 12-00 | 791 | யாழ்ப்பாணம்- மானிப்பாய்- சங்கானை- தொட்டிலடி-பண்டத்தரிப்பு-சில்லாலை மீ.தி.யாழ் |
| 179AB | யாழ்ப்பாணம் | மிருசுவில் | 7-30,9-00,10-45 | 769 | யாழ்ப்பாணம்-சண்டிவீதி-மிருசுவில் மீ.தி.யாழ் |
| 180 | இளவாலை | யாழ்ப்பாணம் | 6-00,11·30,2-40 | 795 | இளவாலை - பன்னாலை - அளம்பனை - சண்டிலிப்பாய்- மானிப்பாய்-யாழ்- மீ.தி.இள. |
| | இளவாலை | தெல்லிப்பளை | 9-00, 10-15 | 795 | இளவாலை -தெல்லிப்பளை மீ.தி.இள. |
| 181 | தெல்லிப்பளை | யாழ்ப்பாணம் | 7-00,9-15,11-35 | 749 | தெல்லிப்பளை- அளவெட்டி-மாசியப்பிட்டி- சண்டிலிப்பாய்-மானிப்பாய்-யாழ்ப்பாணம் மீ.தி.தெல் |
| | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 2-50 | 750 | யாழ்ப்பாணம்-கோப்பாய்-அச்சுவேலி- நெல்லியடி-பருத்தித்துறை மீ.தி.யாழ் |
| 182 | தெல்லிப்பளை | தெற்கு புன்னாலைக் கட்டுவன் | 7-05, 8-30 10-00, 11-30 | 764/5 | தெல்லிப்பளை- மல்லாகம்- மயிலங்காடு - தெற்கு புன்னாலைக்கட்டுவன் மீ.தி.தெல் |
| | யாழ்ப்பாணம் | பருத்தித்துறை | 3-15 | 750 | யாழ்ப்பாணம்-கோப்பாய்அச்சுவேலி-நெல்லியடி-பருத்தித்துறை மீ.தி. யாழ். |

## இன்று ஒரு தகவல்

# நன்மையும் தீமையும்

துரியோதனனுக்கும் தருமனுக்கும் நீண்டகாலமாக ஒரு சந்தேகம் அதை தீர்த்துக்கொள்ள கிருஷ்ணனை அணுகினர்.

'எங்கள் இருவருக்கும் ஒரு சந்தேகம் கிருஷ்ணா! இந்த உலகம் நல்லதா கெட்டதா'? எனக்கேட்டனர்.

கிருஷ்ணர் இருவரையும் நோக்கி, 'நீங்கள் இருவரும் உலகில் எங்கெல்லாம் சென்று வர முடியுமோ, அங்கெல்லாம் சென்று தீயவன் ஒருவனையும், நல்லவன் ஒருவனையும் அழைத்து வாருங்கள் உங்கள் கேள்விக்கு விடை கூறுகிறேன்' என்றார்.

இருவரும் புறப்பட்டுச்சிறிது காலம் கழித்து கிருஷ்ணனிடம் திரும்பினர்.

'கிருஷ்ணா! இவ்வுலகில் எல்லோரும் நல்லவர்களே, தீயவர் எவருமில்லை ஆகவே தீயவர் யாரையும் அழைத்து வர முடியவில்லை' என்றான் தருமன்.

'கிருஷ்ணா,! இவ்வுலகில் எங்கும் தீயோர்களே உள்ளனர். நல்லவர் எவருமில்லை. ஆகவே நல்லவனை அழைத்து வரமுடியவில்லை' என்றான் துரியோதனன்;

இருவரையும் நோக்கிப் புன்னகைத்த கிருஷ்ணன், 'நல்ல மனமுடையவனுக்கு உலகம் நல்லது தீய மனமுடையவனுக்கு உலகம் தீயது. உள்ளத்தை தூய்மைப் படுத்தினால் உலகம நன்மை மிகுந்ததாகவே தோன்றும்' என்றான்;

ம. சுபாஸ்கரன்

# தமிழருக்கு எதிரான விடயங்களிற்கு எம்.பி.க்கள் ஆதரவு வழங்ககூடாது

### யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொது தேர்தலின்பின்னர் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தமிழ்மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதோ ஆதரவாக வாக்களிப்பதோ அல்லது வாக்களிப்பைத் தவிர்த்துக் கொள்வதோ கூடாது.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் விடுத்த செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பயங்கரவாத தச்சட்டம், அவசரகாலச்சட்டம், வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு நிதிஒதுக்கீடு போன்ற சட்ட மூலங்களுக்கு எதிர்த்து வாக்களிப்பதன், மூலம் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திறனும் தமது எதிர்ப்பை அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

தமிழ் பகுதிகள் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்க சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்துஒருமித்த குரல் எழுப்ப வேண்டும்,

ஒற்றுமையே எமது பலம். தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து குரல் எழுப்பவேண்டும்; ஒருமித்த செயற்பாட்டையும் முன்னெடுக்க வேண்டும்;

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது, [எ-10]

# ஜே.வி.பி.உறுப்பினர்கள் கைக்குண்டுகளுடன் கைது

(கொழும்பு)

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட குண்டுகளை வைத்திருந்த ஐந்துஜே.வி.பி ஆதரவாளர்களை வெலிகம பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

வெலிகம பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில்பிரஸ்தாப நபர்கள் நடமாடியபோது அவர்களை சோதனையிட்ட பொலிஸார் அவர்கள் குண்டுகள் வைத்திருந்ததைக் கண்டறிந்துகைது செய்தனர். [ந-4)

# ரத்வத்தவின் நிர்வாகம் தேர்தல் காலத்தில் பயன்படுத்த துப்பாக்கிகள் கொள்வனவு

(கொழும்பு)

ஜெனரல் ரத்வத்தையின் அமைச்சின் நிர்வாகத்திலடங்கும் இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் டிசம்பர் 5தேர்தல் தினத்தில் பயன்படுத்துவதற்கென ரீ. 56 ரகத்துப்பாக்கிகளை கொள்வனவு செய்துள்ளது.

40 இலட்சம் ரூபா பெறுமதியான இக் கொள்வனவு நவம்பர் மாதத்தில் நடைபெற்றுள்ளது.

இலங்கை விமானப்படை இதற்கான கட்டளைகளை அனுப்ப, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதற்கான பணத்தை கொடுத்துள்ளது.

சீனாவின் சைனாநோத் இண்டஸ்றீஸ் கோப்பரேஷன் நிறுவனத்திற்கு இலங்கை வங்கியூடாக 46 ஆயிரத்து 488 டொலர்கள் அனுப்பப் பட்டன.

இதேவேளை, கண்டிமாவட்டத்தில் பல குழுக்கள் ஆயுதங்களுடன் உலவித்திரிவதாக ஐ.தே.மு. பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளது. (உ)

# முன்னாள் பிரதி அமைச்சர் சாலிந்த திஸநாயக்காவை கொலை செய்ய முயற்சி

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் சாலிந்த திஸநாயக்காவை படுகொலை செய்ய மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளன.

அண்மையில் குருநாகல் மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் மேஜர் ஜெனரல் சரத்முனசிங்காவின் அடியாட்கள் சிலர் திஸநாயக்காவின் வீட்டிற்கு சென்று கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்

வாகனங்களில் வந்த அடியாட்கள் ஆயுதங்களுடனும் கத்திகள் பொல்லுகளுடனும் வந்ததாக தெரிவிக்கபடுகிறது. (உ-7)

## மிதிவெடியில் சிக்கி பலத்தகாயம்

(அல்லாரை)

சில தினங்களுக்கு முன் அல்லாரை தம்பு தோட்டத்திற்கு அருகாமையிலுள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்ற கண்ணப்பன் கோவிந்தசாமி (வயது 55)என்பவர்மிதிவெடியில்சிக்கி ஒரு காலில் பலத்த காயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-210)

# நீதியான வாக்களிப்புக்கு குந்தகம் விளைவிப்போர் அந்தவிடத்திலேயே சுடப்படுவர்

(கொழும்பு)

வாக்களிப்பை குழப்புபவர்கள், வாக்குச்சீட்டுப் பெட்டிகளில் குறுக்கிட்டு தொந்தரவு செய்பவர்கள் என்போரை கண்டதுமே சுட்டுவிடுமாறு பொலிஸாருக்கு உத்தரவுகள வழங்கப்பட்டுள்ளன.

இத்தகைய கடும நடவடிக்கைகளை எடுப்பதற்கு தாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக புத்தளம், அநுராதபுரம், அம்பாறை, ஆகிய மாவட்டங்களில் இதனை அமுல் செய்யவேண்டியுள்ளதாகவும் தேர்தல் பணிகளுக்கானபொலிஸ்பிரிவு பிரதிபொலிஸ்மா அதிபர் காமினிறவரத்தை தெரிவித்தார். (உ)

## சிறுமியை ஏமாற்றி திருட்டு

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணையில் பிரப்பங்குளம் ஒழுங்கையில் ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலச்சென்ற5வயதுநிரம்பிய சிறுமியை ஏமாற்றி அவரின் இருதோடுகளையும் ஒருவர் கழற்றிச்சென்றுள்ளார்.

இசசம்பவம சில தினங்களுக்கு முன் நடைபெற்றுளது. நுணாவிலில் இருந்து இடம்பெயர்ந்துபிரப்பங்குளம் வீதியில் வசிக்கும் வசதிகளற்ற ஒருகுடும்பத்தைச்சேர்ந்த அச்சிறுமிதோடுகளைக் கழற்றியவர்தனது சொந்தக்காரரிடம பின்னேரம் கொடுத்து விடுவதாகக் கூறினார் என்று தனது பெற்றோரிடம் தெரிவித்ததார், (எ-111)

# ஒருமாத காலத்தில் 32பேரைக்காணவில்லை

[வவுனியா]

வவுனியா பிரதேசத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு நவம்பர் மாதத்தில மட்டும உறவினர்களினால் 32 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இணைப்பாளர் எஸ்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டவர்களில் இருவர் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

# அரசியலுக்கு அப்பால் ஊடக படிப்புகள் வட்டம் ஏற்படுத்த வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

அரசியலுக்கு அப்பால் ஊடக படிப்புகள் வட்டம் (Media Study Cycle) ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டிய தன் அவசியத்தை ஐக்கிய சோஷலிசக் கட்சியின யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளரும் 'சலனசித்திரம்' அமைப்பின் பொதுச் செயலாளருமான க, தேவதாசன் வலியுறுத்தியுள்ளார்,

அண்மையில்யாழ் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பான விவரங்கள் அடங்கிய மகஜர்களை அமைச்சுச் செயலகங்களில் கையளிக்கும் போதே தகவல் தொடர்புத்துறைச் செயலாளரிடம் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இதேவேளை அமைச்சுசெயலகஅதிகாரிகள் இப்பிரச்சினைகள் பற்றி தமக்கு எதுவுமே தெரியாது என்று ஆச்சரியப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மகஜரின் பிரதிகள கனடா, ஜப்பான், இந்தியா உட்பட ஏழுவெளி நாட்டுத் தூதுவர்களிடமும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை கைதுசெய்யப் பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின்வாக்குரிமை தொடர்பாகவும் அவர் பிரச்சினையைக் கிளப்பியுள்ளார்,

மேலும், குடா நாட்டு மக்களின் பிரச்சினைகள்தொடர்பாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனிடம் தான் பிரஸ்தாபித்த சமயம் தேர்தல் முடிந்தவுடன்இது பற்றிய முறைப்பாடுகளைத தெரிவிக்குமாறு அவர்தம்மிடம் கூறியதாக தேவதாசன் தெரிவித்தார்; (உ-106)

# துப்பாக்கிப் பிரயோகம் இருவர் பலியாகினர்

## கடுகவெலவில் சம்பவம்

(கொழும்பு)

கடுகவெல பிரதேசசபைத் தலைவரின்வீட்டின்மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர் இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை எயன கடுகவெல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (க-05)

## ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் பிரசாரத்திற்காக ஊர்காவற்றுறைக்குச் சென்ற தமிழ்க் கூட்டமைப்பினர் மீதும, ஆதரவாளர்மீதும்மேற்கொள்ளபபட்ட தாக்குதல் மற்றும் அன்றிரவு பல்கலைக் கழக மாணவர் விடுதி மீதான கரனெட் தாக்குதல், இளவாலையில ஐ.தே.க.வேட்பாளர் மகேஸ்வரனை இலக்குவைத்த துப்பாக்கிப் பிரயோகம், நெல்லியடிவல்லையில்ஒரு அரசியல் கட்சியின் அலுவலகத்தின் மீதான தாக்குதல் ஆகியவற்றிற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின யாழ மாவட்டத்திற்கான கூட்டத்தில கடும் கண்டனம் தெரிவித்து தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டம் அண்மையில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில்நடைபெற்றது. (எ)

# படை நடவடிக்கையில் முக்கிய பங்கு வகித்த என்னை கைது செய்ய அரசு முயற்சி

### முன்னாள் பிரதி சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு எதிரான 'ஜெயசிக்குறு' படை நடவடிக்கையில் முக்கிய பங்காற்றி வந்த என்னை அரசாங்கம் கைது செய்ய முயற்சிக்கின்றது. அதற்கு நான் தயாராகவே உள்ளேன்.

முன்னாள் பிரதி சபாநாயகர் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் இராணுவ வரலாற்றில் நீண்ட காலம் இடம்பெற்ற 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையில் 3 ஆயிரத்து 400 படையினர் கொல்லப்பட்டனர்;

உண்மையாக நாட்டுக்கு சேவையாற்றிய என் மீது அபாண்டமான பழி சுமத்துவது கவலைக்குரியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்; [க-5]

## சிந்தனைக்கு விருந்து

### எல்லாரும் ஏமாறுவார்

விலைக்கட்டுப் பாடென்று வைப்பவர் வைக்கட்டும்
விலைக்கும் அளவுபடி இல்லை - சமமுள்ள
கல் (லு) அச் (சு) உண்டென்று காட்டிநிறுத்திட்டால்
எல்லாரும்ஏமாறு வார்.

பழையவன்

## இறுதிக் கட்ட பிரசார தினத்தன்று பல குண்டுவீச்சு சம்பவங்கள்

(கொழும்பு)

பொதுத்தேர் தலுக்கான இறுதிப்பிரசார தினமான நேற்று முன்தினம்இரவு கண்டி மற்றும் பத்தேகம பொலிஸ் பிரிவுகளில்இரு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கண்டியிலுள்ளதன்கடஎன்னுமிடத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐ.தே.க. ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து இடம்பெற்ற குண்டு வீச்சில் இருகட்சிகளின் ஆதரவாளர்கள் உட்பட பொது மக்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

பத்தேகம பொலிஸ்பிரிவிலுள்ள தலகின்னஎன்றஇடத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தில்காயமடைந்த பலர் பேராதனை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

தேர்தல் வன்முறையில் ஈடுபட்ட

## 168 தப்பியோடிய படையினர் கடந்த இரு தினங்களில் கைது

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்ட, 168 தப்பியோடிய படையினரை கடந்த இரு தினங்களில் மாத்திரம்கைது செய்திருப்பதாக பொலிஸ் திணைக்களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இதுவரை 80 ஆயிரம் பேர் இராணுவத்தை விட்டு ஓடியிருப்பதாகவும், தேர்தல் முடிந்த பின்னர் இவர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படவிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க, தேர்தல்கால வன்முறைகளில் நாடுபூராகவும் இதுவரை 38 பேர் உயிரிழந்திருப்பதாக பக்கச்சார்பற்ற கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது. (உ)

## இன்று காங்கேசன் விஜயம்

(யாழ்ப்பாணம்)

வழமைபோன்றுஇம்முறை, நாளை புதன்கிழமை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகஅதிகாரிஎன். ஜீவேஸ்வரா காங்கேசன்கைதிகள் தடுப்பு முகாம் செல்லமாடார் எனவும்,

அன்று தேர்தல் தினமாகையால் அதற்காக இன்று செல்வார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## சிற்றூர்திச் சேவை குடாநாட்டில் குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில்போக்குவரத்துச்சேவையில்ஈடுபடும் தனியார்சிற்றூர்திகளின்எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகிறது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாகவே சிற்றூர்திகள் குறைந்தளவில் சேவையில் ஈடுபடுவதாகவும்,

இதனால் போக்குவரத்துச் சாதனங்களான பேருந்து மற்றும் சிற்றூர்திகளில் மிகுந்த நெரிசல் நிலவுவதுடன், சிற்றூர்திகளின் மேல் இருந்து பயணம் செய்யும்காட்சிகளையும் தாராளமாகக்காணமுடிகிறது. (உ


## அரசாங்க அறிவித்தல்

### பாராளுமன்றத் தேர்தல் 05.12.2001

மேற்படி தேர்தலில் இல. 10 - யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்தின் பிரகாரம் சிங்கள அகரவரிசையில் தயாரிக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களையும், இலக்கங்களையும்குறிப்பிட்டு வாக்காளர் அட்டையுடன் விநியோகிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல் தொடர்பான தமிழ் அறிவித்தலில் (முதன்மை வேட்பாளர்) பெயர் இல.3 அஹமட் சுல்தான் சுபியான் என்ற பெயர் தவறவிடப்பட்டுள்ளது என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் வேட்பாளர்களின் பெயர்கள் பின்வருமாறு அமைய வேண்டும் எனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது:

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

மரம்

1: அப்துல் காதர் இக்பால்
2. அப்துல் ஹய் ஹசன் மொகிதீன்
3. அஹமட் சுல்தான் சுபியான்
4. கானசுந்தரம் ஆனந்தகுமார்
5. மொஹமட் அபூபக்கர் செயட் றிபாய்
6. மொஹமட் உசன் தம்பி அப்துல் சையூம்
7. மொஹமட் ராசா நவீசாட்
8. மொஹிதீன் அப்துல் காதர் ஜவ்பர்
9. சாஹுல் ஹமீட் தைபூர்
10. சாஹுல் ஹமீட் முத்தலிப்
11. சுபயிர் மொஹமட் மனாப்தீன்
12. சுல்தான் அபதுல் காதர் முபீன்

க. சண்முகநாதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
இல. 10-யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்.

தெரிவத்தாட்சி அலுவலரின் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2001. 11. 28. (C-2953)



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

### வாகன மிருகவரித் தகடுகள்-2002, செய்து வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

2002ம் ஆண்டுக்குரிய வாகன மிருகவரித் தகடுகள், இதன் கீழ் சொல்லப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக செய்து வழங்குவதற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 2001-12-13ம திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கூறுவிலைகள் "தலைவர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

நிபந்தனைகள்

1. துவிச்சக்கரவண்டித் தகடு: இது 3'' நீளம் $1\frac{1}{2}$'' அகலம் கொண்டதாக அமைதல் வேண்டும். 2002, வ.தெ.பி.ச.து.வ. என்ற எழுத்துக்கள், தொடர் இலக்கம் என்பன தகட்டில் மிகத் தெளிவாக பதிக்கப்படல் வேண்டும்.
2. மாட்டுவண்டித்தகடு: இது 4'' நீளம் 3'' அகலம் கொண்டதாக அமைதல் வேண்டும். 2002, வ.தெ.பி.ச.மா.வ. என்ற எழுத்துக்கள், தொடர் இலக்கம் என்பன தகட்டில் மிகத் தெளிவாக பதிக்கப்படல் வேண்டும்.
3. தகட்டின் இடது பக்க மேல் மூலையில் துவாரம் இடப்படல் வேண்டும்.
4. ஒவ்வொரு தகட்டின் மேற்புறமும் நீலம் வர்ணத்தால் பூசப்படல் வேண்டும்.
5. துவிச்சக்கர வண்டித் தகடுகள் 8000 உம், மாட்டு வண்டித் தகடுகள் 50 உம் செய்து வழங்கப்படல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. கமலசேகரன், ஜே.பி.யு.எம்.
தலைவர்,
வலிதெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2001-12-03 (கி-2970)



## எம் இனிய மக்களே!



உயர்கோட்டு வழக்கறிஞராக கற்றுத் தேர்ந்தும்
கறுப்பு அங்கி அணிந்து வழக்காடு மன்றம் சென்று
வழக்குரைத்து தன்வளம் சேர்க்காது தமிழ்மக்களின்
உயர்வுக்காகதமிழ் இனத்தின் தன்னாட்சி
உரிமைக்காக உழைக்கும் தலைவனுக்கு
நீங்கள் வழங்கும் விருப்புவாக்குதெய்வ நீதிஅல்லவா?

ஸ்ரீ நான்கு தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் சின்னம் உதயசூரியனுக்கு உங்கள் வாக்குகளை அளித்து முதன்மைவேட்பாளர் வீ. ஆனந்தசங்கரியின் இலக்கம் 3க்கும் ஒரு விருப்பு வாக்கு அளித்திடுவீர்,

| | | |
|---|---|---|
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
| வீ. ஆனந்தசங்கரி | 3 | X |

(C-2968)

## பண்ணைப் பாலம் திருத்தம்

(ஊர்காவற்றுறை)

யாழ். பண்ணைப் பாலம் புனரமைப்பு வேலை தற்பொழுது இடம் பெற்று வருகின்றது.

கடந்த வருடம் புனரமைப்புச் செய்யப்பட்ட மேற்படி பாலம், சேதமடைந்ததை அடுத்து மீண்டும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. [உ-75]

அமைச்சருடன்

கும் மக்களில் அமைச்சரைச் சந்திக்க முற்பதிவு செய்தவர்கள் இன்றுகாலை 10மணிக்கும் அமைச்சின் யாழ் அலுவலகத்துக்கு வருகைதருமாறு ஈ.பி.டி.பி யின் தகவல் தொடர்பாளர் திவாகர் கேட்டுள்ளார். (இ)


பொதுத்தேர்தல் 05 -12 - 2001

# நாளைய வெற்றியை நமதாக்குவோம்!
# புதிய வரலாற்றைத்தோற்றுவிப்போம்!

★ பேரினவாதக் கட்சிகளின் முகவர்களைத் தோற்கடிப்போம்
★ தமிழர் கூட்டமைப்பின் பழமை வாத ஆதிக்க அரசியலை நிராகரிப்போம்
★ சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வலுப்படுத்தி முன்னெடுப்போம்

உழைக்கின்ற வர்க்கத்தின் உரிமைச் சின்னம்
விழிப்புற்ற தமிழர்களின வெற்றிச் சின்னம்
**மணிக்கூட்டுச் சின்னம்**

**சி. கா. செந்திவேல்**
முதன்மை வேட்பாளர்
இல 6

**வீ.ரகுநாதன்**
வேட்பாளர்
இல 10



X

**க. ஆனந்தகுமாரசாமி**
வேட்பாளர்
இல 1

**க. வேலும்மயிலும்**
வேட்பாளர்
இல 2

**புதிய ஜனநாயக கட்சி**

(4055) வடமராட்சி மக்கள்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2000ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில்ஏற்பட்ட வாழை அழிவுகளுக்கான நிதிக் கொடுப்பனவு ரூபா 23 இலட்சத்தினை புத்தூர், உரும்பிராய் கமநல சேவை நிலையங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கியமை குறித்து அப்பகுதி விவசாயிகள்,

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர்
மாண்புமிகு
**டக்ளஸ் தேவானந்தா**
மற்றும்
யாழ். மாவட்ட
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
**கே. வி. குகேந்திரன்**
**(ஜெகன்)**
நல்லூர் பிரதேசசபைத் தலைவர்
**மணிபல்லவராஜன்**
**(நிஷாந்தன்)**

ஆகியோருக்கு தமது உளம் நிறைந்த நன்றியையும் பாராட்டுக்களையும தெரிவித்துக் கொள்கிறார்கள்

தலைவர்
வலி.கிழக்கு விவசாய சம்மேளனங்களின் ஒன்றியம்

(இ-2971)



கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும் நீண்டகாலமாக சமூகசேவை செய்பவரும் மனித உரிமையாளருமாகிய

செல்வி

# மகேஸ்வரி வேலாயுதம்

(சட்டத்தரணி)

**உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளராகநிற்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்**

மாணவப் பருவத்திலிருந்தே இவர் தன்னை ஈழத் தமிழர் போராட்டத்திற்காக அர்ப்பணித்து ஆற்றிய சேவைகள் ஏராளம் ஏராளம்.

1977 லிருந்து இன்றை வரைக்கும் தனக்கென வாழாது தமிழினத்துககென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒரே பெண்மணி இவர்

எத்தனையோ அச்சுறுத்தல்கள் நெருக்கடிகள் மத்தியிலும் இவர் தனியாளாக நின்று அளப்பரிய சேவைகளும் செய்துள்ளார்.


இலங்கை வரலாற்றிலேயே முதன் முதலாக சர்வதேச சமுகத்தை செம்மணிக்கு கொண்டு வந்த பெருமைக்குரியவர்-

96 ச் சம்பவங்கள் 97 உடன் முடிவுக்கு கொண்டு வருவதில் இவர் ஆற்றிய செயல்கள் போராட்டங்கள் சர்வதேசமும் அறிந்தவை.

ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு இலவச சட்ட உதவி புரிந்ததுடன் நூற்றுக்கணக்கானவர்களுக்கு பிணைப்பணமும் செலுத்தி எல்லாரையும் யாழ்ப்பாணத்தில் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்தவர்.

இவர் ஆற்றிய சேவைகளை பக்கம் பக்கமாக எழுதலாம். பெண்மணியாக இவர் நடத்திய போராட்டங்கள் உலகறிந்த உண்மைகள். இன்றைக்கு இலங்கையின் வடக்கில் மட்டும மல்லாது கிழககு தெற்கிலும மனித உரிமைகள் மேமபட்டு இருப்பதற்கு இவர் ஆற்றிய சேவைகளும் ஒரு காரணம்-

இப்பொழுது தனது பிறந்த பூமிக்கு வந்திருக்கிறார். எமது பிரதேசமும் இவரது சேவைகள் பெற்று முன்னேறுவதற்கு இவரை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்து அனுப்புவது எமது கடமையாகும்- எதிர்வரும தேர்தலில் இவரை பெரும்பாலான வாக்குகளால் தெரிவு செய்து அனுப்புவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் முதல் பெண் பாராளுமன்ற பிரதிநிதியை அனுப்பிய பெருமை எமது உடுப்பிட்டி வாழ் மக்கள் பெற இருக்கின்றனர் இந்த வரலாற்று சாதனையுடன் இவரது சேவையும் எமக்கு கிடைப்பதற்கு எதிர்வரும் தேர்தலில் எல்லோரும் வீணைக்கு நேரே புள்ளடி போட்டு வெற்றியடையச் செய்வோமாக



X

வடமராட்சி வாழ்மக்கள்

(இ-2980)

# மக்கள் மனப்பூர்வமாகப் பங்கேற்க வேண்டும்

**மு. சிவசிதம்பரம்**
(தலைவர் த. வி. கூ.)

ஈழப்போராட்டம் ஒரு புதிய பரிமாணம் எடுத்தபோது இளைஞர்கள் ஆயுதம் தாங்குவது அவசியம் என்று நினைத்தவர்தான் அமிர்தலிங்கம், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக ஆயுதம் பெறுவதற்காக நாங்கள் இந்தியா விடம் எவ்வளவு வாதாடி இருப்போம்..? ஆனால் இன்றைக்கு ஆயுதம் ஈழப்போர் முனையிலேயே கிடக்கிறது. காரணம் தமிழர் விடுதலைப் போராட்டம் ஆயுத ஏஜெண்டுகளின் போராட்டமாக மாறிப் போய்விட்டதுதான் இந்த ஆயுத ஏஜெண்டுகளுக்குப் போர் நடந்து கொண்டிருந்தால் தான் வியாபாரம் நடக்கும். அதனால் அமைதி ஏற்பட அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

பதினைந்து, இருபது ஆண்டுகளாக எங்கள் மக்கள் உழைக்கவில்லை. படிக்கவில்லை மரத்துப்போன வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எங்கள் பையன்கள் அறிவு வருவதற்கு முன்பே ஆயுதம் ஏந்திக் கொண்டிருக்கின்றார்கள்
அவர்களைக் கண்டு மக்கள் பயப்படுகிறார்கள் பணம் கொடுக்கிறார்கள் அதனால் துப்பாக்கி தான் அதிகாரத்தை வழங்குகிறது என்று மனோரீதியான முடிவுக்கு எங்கள் பையன்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள்

அறிவுபூர்வமான தலைவர்களை அழிப்பது ஒரு இயக்கத்தை சிதைக்க முதல்வழி. அதன் விளைவுதான் அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் கொல்லப்பட்டது இதை யார் தூண்டுகிறார்கள்?

இந்தியாவின் உளவு நிறுவனமான 'றோ' (சுயுறு) அதிகாரி உன்னிகிருஷ்ணனைப் பிடித்து இந்தியாவின் ராணுவ ரகசியங்களைப் பெற்றவர்கள் அமெரிக்கர்கள் அவர்களுக்கு இந்தியாவுக்கு ஆதரவான சக்திகள் வேறு நாட்டில் இருப்பது என்றைக்கும் பிடிப்பதில்லை அதனால் இந்தியாவின் நல்லுறவுக்காகப் பாடுபட்டவர்களை பகைமுடிக்கிறார்கள் அதுவும் எங்கள் பையன்களைக் கொண்டே?

எவ்வளவு இழப்புக்கள் எங்களுக்கு? இதுவரை அரவணைத்த தமிழ் மக்கள் எங்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள்! எல்லாவிதத்திலும் ஈழத் தமிழர்களுக்காக உதவிய வெளிநாட்டுத் தமிழர்கள் விரக்தி அடைந்து ஒதுங்கிக் கொண்டிருக்கிறார்கள் தமிழக முதல்வர் இவர்கள் தொல்லையே வேண்டாம் என்று ஒதுங்குகின்றார். அகதிகளாக வந்த மக்களைவெளிமா நிலத்துக்கு அனுப்புகிறார்... இனி என்ன நடக்கும் என்று சொல்ல முடியாத சூழ்நிலை தினமும் ஒரு திருப்பம்

மக்கள் மனப்பூர்வமாகப் பங்கேற்று நடத்தும் போராட்டம் வெல்லும். துப்பாக்கிகள் அமைதியை கொண்டுவராது அது போராளிகளுக்குப் புரியும் வரை பொறுப்பிருப்பதுதான் ஈழத்திலுள்ள ஜனநாயகவாதிகளுக்கு உள்ள ஒரேவழி! என்று நம்பிக்கையோடு சொல்கிறார் அந்த எம். பி.

சந்திப்பு: திலீபன்

**த. வி. கூ. செயலதிபர் அ. அமிர்தலிங்கம் மற்றும் வெ. யோகேஸ்வரன் ஆகியோர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பின்னர் த. வி. கூ. தலைவர் மு. சிவசிதம்பரம் சென்னையிலிருந்து வெளிவரும் 'இதயம்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியிலிருந்து இது தரப்படுகிறது**

**துப்பாக்கிகள் அமைதியைக் கொண்டுவராது; அமைதியைக் கொண்டுவரப் பாடுபடும் போராளிகளுக்கு வாக்களியுங்கள்**

(இ-2959)

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
## (ஈ.பி.டி.பி)

# பொதுத் தேர்தல் - 2001



# ஐக்கிய தேசியக் கட்சி

## யாழ்மாவட்டம்

தி. மகேஸ்வரன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்,
ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளரும்

## யாழ். குடா நாட்டு வாக்காளப் பெருமக்களே!

★ ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலை இந்தியக்கரைவரை சென்று செய்தார்கள் கடந்த ஏழு ஆண்டுகளாக சந்திரிகா அரசின் ஆட்சிக்காலத்தில் மீனவர்களின் தொழிலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது இதனால் அவர்கள் தொழிலை இழந்தனர் எனவே மீன்பிடித் தடையை நீக்கவும்

★ சட்ட விரோத ஆயுதக் குழுவினால் அடக்கப்பட்ட நிலையில் தீவக மக்கள் வாழுகின்றனர் அண்மையில்கூட அங்கு இந்த ஆயுதக் குழுவினர் தமிழ்க் கூட்டமைப்பின் பிரமுகர்களை வெட்டியும் அடித்தும் கொலை செய்துள்ளனர்
இந்த சட்ட விரோத ஆயுதக்குழுவினரை சட்டத்தின்முன் நிறுத்தி நீதி நடவடிக்கை எருக்கவும்

★ தென்மராட்சி,வலிகாமம் வடக்கு உட்பட அனைத்து மக்களும் மீள் குடியமர்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து அவர்களுக்கு உடைமைச் சேதத்துக்கான நிதியை அரசிடம் இருந்து பெற்றுக் கொடுப்பதற்கும் அவர்கள் சுமுகமாக வாழ்வதற்கும்

## ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன்

அவர்களை ஆதரித்து

நாளை நடைபெறும் தேர்தலில் அவரது சின்னமான யானைச் சின்னத்திற்கு வாக்களிப்பதுடன் அவரது இலக்கமான 4ற்கு புள்ளடியிட்டு வெற்றி பெறச் செய்து எமக்கு விடிவு ஏற்பட வாக்களியுங்கள்.

யாழ் குடாநாட்டு மக்கள்

| | | | |
|---|---|---|---|
| (யானை) | ☒ | 4 | X |

(இ-3982)



## விளையாட்டு செய்தி



# சச்சின் மீது விதிக்கப்பட்ட தண்டனை நீக்கம்

(புதுடில்லி)

இந்திய அணி வீரர் சச்சின் டெண்டுல்கர் பந்தை சேதப் படுத்திய குற்றச் சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்ற தென்னாபிரிக்காவிற்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பந்தை வேண்டுமென்றே சேதப்படுத்திய குற்றச்சாட்டில் சச்சினுக்கு ஒரு டெஸ்ட் போடடியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டமை தெரிந்ததே.

பின்னர் சச்சின் தான் வேண்டுமென்றே பந்தை சேதப்படுத்தவில்லை என்றும் பந்தில் அதிக சேறு ஒட்டி இருந்ததால் தான் பந்தை துப்பரவு செய்ததாகவும் கூறி இருந்தார்.

இதனை ஆராய்ந்த ஐ.சி.சி வேண்டும் என்றே சச்சின் இவ்வாறு செய்யவில்லை என்றுஅவரது தண்டனையை நீக்கியுள்ளது.

நடுவர்களுக்கு தெரிவிக்காமலேயே பந்தை துப்பரவு செய்தமையாலேயே தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-2]

# நேர்த்தியான விளையாட்டு வீரர் பட்டம் சுலைமானுக்கு

(சூரிச்)

சர்வதேச கால் பந்தாட்ட சம்மேளனத்தினால், நேர்த்தியான விளையாட்டுக்கான டிப்ளோமா பட்டம் கானாவின் இளவயதுவீரர் சுலைமா அப்துல்லாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் சூரிசில் நடைபெற்ற இல்வாண்டின்நேர்த்தியான வீரரை தெரிவுசெய்யும் நிகழ்விலேயே அவருக்கு இவ்வரிய பட்டம் கிடைத்துள்ளது.

கால்பந்து ஆடுகளத்தில் மோதுண்டு சுய நினைவு இழந்த எதிரணி வீரருக்கு தனது வெற்றிவாய்ப்பையும் பொருட்படுத்தாது வாய் மூலம் செயற்கை சுவாசம் வழங்கி அவரைக் காப்பாற்றியதற்காக சுலைமானுக்கு இவ்விசேட பட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை, 2001 இன் நேர்த்தியான கால்பந்து வீரர் விருது 'வெஸ்ரான் யூனைட்டட்' கழக வீரர் பாலேடினிக் யோகவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இவர் தான் விளையாடிய போட்டி ஒன்றில் வெற்றிக்கான கோலை போட சந்தர்ப்பம் கிடைத்த போதும் எதிரணி கோல் காப்பாளர் உபாதையால் அவதிப்படுவதைக்கண்டு அவருக்கு உடனடியாக உதவி செய்தமைக்காக இவ்விருது வழங்கப்பட்டது. (உ-2)

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் திருத்தம்

(மொஸ்கோ)

விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளிநிலையத்திற்குரஷ்யாவினால் அனுப்பப்பட்ட விண்வெளி ஓடமொன்று அதனுடன் இணையத் தவறியுள்ளது.

இருப்பினும் விண்வெளி நிலையத்திற்குத் தேவையான பொருட்களை எடுத்துச் சென்ற மேற்படி ஓடத்தில் இருந்த இரண்டு ரஷ்ய வீரர்களும் அதனின்றும் வெளியேறிவானததில் மிதந்தபடி விண்வெளி நிலையத்தில் திருத்த வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் அண்மையில் அங்கு அனுப்பிவைக்கப்படவிருந்த என்டர் என்ற அமெரிக்க விண்வெளி ஓடத்தின் பயணம் இன்று வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்விண்வெளி ஓடத்தில் பயணம் செய்யும் 3 ரஷ்ய வீரர்களும் விண்வெளி நிலையத்தை அடைந்ததும் அங்கு பணிபுரியும்3வீரர்களும் பூமிக்குத் திரும்பவுள்ளனர். [உ-5]

# விஷச்சாராயம் அருந்தி 62 பேர் உயிரிழப்பு

(சென்னை)

தமிழ் நாடு பண்ருட்டி பகுதியில் விஷச்சாராயம் அருந்தியதால் பெண்கள் உட்பட 62 பேர் பலியாகியுள்ளதுடன் 30 பேர் கண்பார்வை இழந்துள்ளனர்.

அண்மையில் இடம் பெற்ற இச்சம்பவத்தை அடுத்து, பெண் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், காவல் கடமையில் ஈடுபட்டிருந்த 3 பொலிஸார் இடை நிறுத்தப்பட்டும், 21 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுமுள்ளனர். (உ7)

# ஒஸாமா பின்லேடனை கொல்வது மனித உரிமையை மீறும் செயல்

## அமெரிக்காவுக்கு ச.செ.ச.எச்சரிக்கை

(ஜெனிவா)

ஒஸாமா பின்லேடன்கண்டுபிடிக்கப்பட்டால் அவரை சுட்டுக்கொலலக் கூடாது; அவ்வாறு செய்வது மனித உரிமை மீறலாகும் எனசர்வதேச செஞ்சிலுவைசங்கம் அமெரிக்காவுக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளது.

பின்லேடனை தேடிவரும் அமெரிக்கப்படைகளுக்குஅமெரிக்கா அவரை கண்ட இடத்தில்சுடும்படியாக விடுத்துள்ள பணிப்புரையை அடுத்தே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கநிர்வாகஇயக்குநர்போல் குறோஸ்ரீடர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

யுத்தத்தின் போது கைது செய்யப்படுபவர்கள் இறைக்கைதிகளாக வைக்கப்பட வேண்டும் அவர்களைக்கொல்லக்கூடாது. அவ்வாறு செய்து மனித உரிமை மீறலாகும் என்று போல் குறோஸ்ரீடர் மேலும் தெரிவித்தார். (உ-7)

## ஆப்கானின்

# கிழக்குப் பகுதியை நோக்கி அமெ. படைகள் விரைவு

(காபூல்)

ஒஸாமா பின்லேடனை கைது செய்யும் நோக்குடன் அமெரிக்காவின் விசேட படையினர் ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியை நோக்கி விரைந்துள்ளனர்.

இதைவிட தலிபானின் வசமுள்ள ஒரே ஒரு நகரான கண்டகார் மீது அமெரிக்க சிறப்புப்படையினர் தாக்குதல்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, ஒஸாமா பின்லேடன் ஜலலா பாத்திற்கு அருகேஉளளபோறோபோரா காட்டுப் பகுதிக்குள் அமைந்துள்ள குகை ஒன்றில் ஒளித்திருப்பதாக அமெரிக்க உதவி ஜனாதிபதி டிக்ஸனி தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க ஆப்கானில் அரசமைப்பது தொடர்பாக ஜேர்மனியில் இடம் பெற்று வரும் மாநாடு பின்னடைவு கண்டுள்ளதாக தெரிய வருகிறது.

மேற்படி மாநாட்டில் கலந்து கொண்ட 'பஸ்ரின்' அமைப்பின் பிரதிநிதி மாநாட்டைவிட்டுவெளிநடப்புச் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ((உ-7)

# கண்ணிவெடியில்இருந்து காலைக் காக்கசப்பாத்து சிங்கப்பூரில் கண்டுபிடிப்பு

(சிங்கப்பூர்)

கண்ணிவெடி ஆபத்தில் இருந்து பொதுமக்களை காப்பாற்ற சிங்கப்பூரைச் சேர்ந்த ஆர்.ஏப்ஆர்ஹோல்டிங் என்ற கம்பனி நவீன சப்பாத்தை உருவாக்கியுள்ளது.

70 கிராம் அளவு வரை வெடி மருந்துகளை மிதித்தால்இந்தசப்பாத்து காலைக் காப்பாற்றும்தன்மை கொண்டது.

இதன் அடிப்பகுதியில் முன்பக்கம் எவர்சில்வர்தகடும்பின்பக்கம்அலுமினியத்தகடுகளும் பொருத்தப்பட்டுள்ளதால் அந்தச் சப்பாத்தை அணிந்து நடந்தால் வெடி மருந்துகள் அதைஊடுருவ முடியாது.

சிங்கப்பூர் பாதுகாப்புதுறையில்பணியாற்றும வாஸ்என்ற நிபுணர் இதனை உருவாக்கியுளளார்.

கண்ணிவெடியின் பாதிப்பு அதிகரித்துள்ள இவ் வேளையில் இதுபெரும் வரவேற்பை பெறும் என நம்பப்படுகிறது) (உ-2)

# கம்போடியாவில் தீவிபத்து 800 வீடுகள்எரிந்து நாசம்

(போனோம்பென்)

கம்போடியாவில் தவறுதலாக ஏற்பட்ட தீவிபத்தினால் 800 இற்கும் அதிகமான வீடுகள் எரிந்து நாசமாகியுளளன.

அங்கு இப்போதுகடும்குளிர் நிலவுவதால், குளிர்காயமூட்டிய தீயே இந்த அனர்த்தத்திற்குக்காரணம் என நம்பப்படுகிறது. (து)

# இலங்கையர் 231 பேர் சிங்கப்பூரில் சிறை வாசம்

இலங்கையைச் சேர்ந்த 231 பேர் சிங்கப்பூரில் சிறைத்தண்டனையை அனுபவித்து வருவதாக வெளிநாட்டுவேலை வாய்ப்புப்பணியகம் அறிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட்மாதம்சிறைப்பிடிக்கப்பட்ட இவர்கள், சிங்கப்பூரில் தொழில் செய்வதற்கான அனுமதிப் பத்திரம், அங்கு தங்குவதற்கான விசா அனுமதிப்பத்திரம் என்பனகாலாவதியாகியும்தங்கியிருந்தமையாலேயே கைதுசெய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டுவேலை வாய்ப்புப்பணியகம் மேலும் அறிவித்துள்ளது.

இவர்களில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவர்கள்உட்பட தென் னிலங்கையைச் சேர்ந்தவர்களும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## உலக தரிசனம்

### விமான விபத்தில் 8பேர் பலி

(சென்ஜோசி)

உல்லாசப் பயணிகள் பயணம் செய்யும் சிறிய விமானமொன்று கடந்த புதன்கிழமை கொஸ்டாரிக்காவில் விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். (உ

### மனித உரிமைகள் அமைப்பு கண்டனம்

அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாகக்குடியேறியோர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முகாம்களில் சிறுவர்கள் தடுத்து வைக்கப்படடிருப்பது பற்றி அந்நாட்டுமனிதஉரிமைகள அமைப்பு விசனம் தெரிவித்துளளது. (உ)

### ஒஸாமா உயிருடன் உள்ளார்

(காபூல)

ஒஸாமாபின்லேடனும், தலிபான் தலைவர் முல்லா மொஹமட்ஓமரும் இன்னமும் உயிருடன் தான் இருக்கிறார்கள எனவும் ஆப்கானிஸ்தான் மலைத்தொடர்களில் அவர்கள் மறைந்துவாழ்ந்து வருவதாகவும் வடக்கு முன்னணி வியாழனன்று கூறியுள்ளது. (உ)

### காணவில்லை

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த பெரியதம்பி சத்தியதாஸன்(வயது39)என்பவரை கடந்த சிலதினங்களாககாணவில்லையென அவரது உறவினர்களால்யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யபபட்டுள்ளது.

மேற்படி நபர் சிறிது காலமாக மனநோயால் பீடிக்கப்பட்டிருந்தவர் எனவு குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-19)




பொதுத் தேர்தல்-2001

தமிழே மூச்சு-சேவையே வாழ்வுஎங்கள்கூட்டுறவாளன்

திரு. சி. சிவமகாராசா அவர்களுக்கே எம் வாக்கு

தமிழர் விடுதலைக் கூட்டணி



இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனைஅவன் கண் விடல்.

குறள்

# வலம்புரி

## சிந்தித்து செயற்படுக

நாளை விடிந்தால் தேர்தல், இலங்கையின் வரலாற்றில் நடக்கும் 12 ஆவது பாராளுமன்றத் தேர்தல்.ஒரு வருட காலத்திற்குள் நடைபெறுவது விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் பிரதி கூலங்களில் ஒன்றெனக் கூறலாம்,

வளர்முக நாடான இலங்கை அடிக்கடி தேர்தலைச் சந்திக்குமாகஇருந்தால் அதன் பொருளாதாரம் வீழ்ச்சி அடைவது திண்ணம்.

இந் நிலையில்,நாளை நடைபெறும் தேர்தல் இந் நாட்டிற்கு ஐந்து வருடங்களுக்கு அசைவற்ற ஓர் அரசைப் பிரசவிக்க வேண்டும். ஆனால் தேர்தல்கள நிலைமையை நோக்கும் போது நிலையான ஆட்சிக்கு இடமில்லை என்பது புலனாகின்றது.

தொடர்ந்தும்நம பிக்கையில்லாப்பிரேரணை, கட்சிதாவல்,நிபந்தனை விதிப்பு போன்ற நோய்கள் பாராளு மன்றத்தில் தொடரவே செய்யும்.

காலாகாலமாக வாக்காளர்கள் ஏமாறுபவர்களாகவும், வேட்பாளர்கள் ஏமாற்றுபவர் களாகவுமே இருந்து வருகின்றனர். செய்ய முடியாதவற்றைக் கூடசெய்வோமெனபொய் வாக்குறுதி அளிப்பதும், பின்பு அதனை மறந்து போவதும் மக்கள்ஏமாந்து நிற்பதும் கடந்த கால படிப்பினைகள்.

எனவே வாக்காளர்கள் தாமே சரியெது. பிழையெது, நீதியெது, அநீதியெது என்பதை சீர்தூக்கி ஆராய வேண்டும். கேட்பார் புத்தி கேட்டு செயற்படாமல் தத்தம் மனச்சாட்சிகளை தராசாக நிறுத்தி தமது வாக்களிக்கும் முடிவுகளை எடுக்க வேண்டும்.

ஏனெனில் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் நொந்து கெட்டவர்கள், அவர்கள் இந்த மண்ணில் ஷெல் வீழ்ந்த போதும், விமானம் குண்டு போட்ட போதும் வாழ்ந்தவர்கள்.

எனவே தற்காலிக உணர்ச்சிகளுக்கு இடங் கொடுக்காது ஆயிரம் ஆயிரம் இன்னல்கள் வந்து சேர்ந்தாலும்-இந்தப் பூமியில் வாழப்போபவர்கள் வாக்காளர்களே என்பதை மனதிற் கொண்டு அவருக்காக, இவருக்காக என்றில்லாமல் நெஞ்சத்து நல்லம் யாம் எனும் நடுவு நிலையோடு நின்று சிந்தித்து வாக்களியுங்கள்.

---

### வாய்ப்பந்தல் போடுவது எமது வழக்கமல்ல

# எமது மண்ணின் அவலத்தையும் மக்கள் படும் துயரத்தையும் உலகத்திற்கு உணர்த்துவேன்

### மாநகர முதல்வர் என். ரவிராஜ் உரை

(யாழ்ப்பாணம்)

எமது மண்ணின் அவலத்தையும், மக்கள்படும் துயரத்தையும் வெளி உலகிற்குத் தெரியப் படுத்துவதற்காகவே நாம் தேர்தலில போட்டியிடுகின்றோம்.

மாறாக, பதவி ஆசை கொண்டோஅதிகாரப்வேண்டியோ தேர்தலில் போட்டியிட வில்லை,

எமது கொள்கைகளை மாசு படுத்துவதன் மூலம் எம்மை பின்னடைய வைத்து, தமது வெற்றியை உறுதிப்படுத்தலாம் என சிலர் பகற்கனவு காணுகின்றனர். இதற்குதேர்தலில் தமிழ் மக்கள் தக்க பாடம் புகட்டுவர்.

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது,கட்சியின் யாழ்; மாவட்ட வேட்பாளரும், யாழ். மாநகரமுதல்வருமான என். ரவிராஜ்இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

கடந்த பல வருடங்களாக

**தேர்தல் வியூகம்**

இடப் பெயர்வினால்நலிவுற்று வாழும்மக்களுக்குநிவாரணம் முக்கியமில்லை.

அவர்களை சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்துவது தான் தற்போதையதார்மீகக் கடமை, அதைவிடுத்து, தொடர்ந்தும் நடைமுறைச் சாத்தியமில்லாத விடயங்களில் கவனம் செலுத்துவது அவர்களை மேலும் துன்பதிற்கு ஆளாக்கும் செயல்.

இன்றைக்கு எமது மக்கள் கை கால்களை இழக்கும் சம்பவங்கள் சாதாரண நிகழ்வுகளாகி விட்டன.

இதுபற்றி உரத்துக் குரல் கொடுக்க எவருமில்லை.

இந்த நிலையில், நாம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாத மளிக்க இயலும்,

தவிர நாளும் பொழுதும் போரின்கொடூரத்தால்பாதிப்புற்று வரும் நம்தமிழர் படும் அவலம் போக்கத்தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைகள் நீக்கப்பட்டு, நோர்வே நாட்டு மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும் இனி வரப்போகும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே எமது இலக்கு

வாய்ப்பந்தல் போடுவது எமது வழக்கமல்ல,சொல்லும் செயலும் எபபோதும் ஒன்றே என்று குறிப்பிட்டார். (உ

---

# எமது மக்களைக ரை சேர்க்கவாவது நாம் பாடுபடுவது அவசியம்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது பிரதான இலக்கு கடலில் தத்தளித்துக்கொண்டிருப்பது போல வாழும் மக்களைக் குறைந்த பட்சம் கரைக்கு கொண்டு வந்து சேர்ப்பதாக எமது பணி அமைய வேண்டும்,

யாழ். வர்த்தகர்கள் மத்தியில் அண்மையில் உரையாற்றிய அமைச்சர்டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்;

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: எந்த ஒரு போராட்டமும் இருப்பனவற்றை பாதுகாப்பதையும், பெறவேண்டியதை பெறுவதையுமே நோக்காக கொண்டிருத்தல் வேண்டும். மாறாக தொடர்ந்தும் இருப்பவற்றை இழந்து கொண்டும் அழித்துக் கொண்டும் செல்வதல் எந்தவிதப்பயனும் இல்லை.

நாம் பெறவேண்டியவற்றை ஒரேயடியாக முழுமையாகப் பெற வேண்டும என்று எதிர்பாக்க முடியாது படிப்படியாகக், கட்டம் கட்டமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் காலடிஎடுத்துவைத்துச் செயற்படுவதே பொருத்தமானது.இதுவே எமது அணுகுமுறை; இது உங்களுககும் ஏற்புடையதாகவே இருக்குமென நம்புகிறோம்.

1990ல் ஈ. பி. டி. பீ யினராகிய நாங்கள் தீவுப் பகுதிகளுக்குச் சென்றோம் அப்போது இருந்த பிரேமதாஸா அரசாங்கம் எல்லாக் கட்சிகளையும் அணுகிக் கேட்ட போது எவரும் அங்கு செல்ல முன்வரவில்லை. இறுதியாகத் தான் எம்மை அணுகினார்கள். நாங்கள் தீவுப் பகுதிகளுக்குச் சென்றோம். மக்களுககு உதவுவதற்காக கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தும் நோக்கத்திலேயே சென்றோம். கப்பல் மூலம் நிவாரணப் பொருட்களை எடுத்து வந்த படகுகள் வழியாக தீவுகளுக்கு கொண்டு சென்றோம். எமது தோள்களில் மூடைகள் சுமந்து பல மைல்கள் நடந்தோம்.மண்டைதீவு முதல் நெடுந்தீவு வரை அக் காலகட்டத்தில் வாழ்ந்த ஒவ்வொருவரும் இதனை நன்கறிவர்.

அப்போது ஈ.பி.டி.பீ நிவாரணப் பொருட்களை கொண்டுபோய் ஆடு மாடுகளுக்கும் பனை தென்னைகளுக்கும் வழங்குவதாக கொழும்பிலிருந்து கேலி பேசினார்கள் கிண்டல செய்தார்கள் நாம் சோரவில்லை; தொடர்ந்துநான்குஆண்டுகள் பணிசெய்தோம் 1994 இல் தேர்தல் வந்ததும் வாக்குக் கேட்க வந்தார்கள். மக்கள் தகுந்தபாடப்புகட்டிஅனுப்பி வைத்தார்கள்.

அதே போலவேஇப்போதும் நடந்ததுதெல்லிப்பழையிலும் சுதுமலையிலும் சுன்னாகத்திலும் இடம் பெற்ற பிரசாரக் கூட்டங்களில் தீவக மக்களைப் பற்றியும் தீவகப் பெண்களைப் பற்றியும் இழிவாகப் பேசினார்கள்.விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தனதுஉரையில்எந்தவிதமான சமிக்ஞைகளையும காட்டாத விரக்தியினால் அனுதாபம் தேடும் நோக்கில்தீவகம்நோக்கிச் சென்றார்கள், பிரசாரத்திற்கென சென்றவர்களின் வாகனங்களில் இரிக்கெட் கம்பங்களும் அலவாங்குகளும் ஆயுதங்களும் கூடஇருந்துள்ளன. பொலிஸாருக்கு கூட அறிவிக்காமல் திடீர் விஜயம் செய்தார்கள்; வழியில் மறித்தவர்களுக்கும்போனவர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் மூண்டுள்ளது. கை கலப்பாக மாறி விரும்பத்தகாதசம்பவங்கள் இடம் பெற்றுவிட்டன. இது துரதிஷ்டவசமானதுதுக்ககரமானது. ஆனால் இந்திய இராணுவம் இருந்த போதும் சரி அதற்குப் பின்பும் சரிமாற்றுக் கருத்துக் கொண்டிருந்தவர்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பதுஉங்களுக்குத்தெரியும், ஆனால் இபபோது எம்மை நோக்கி வசைமாரி பொழிபவர்களுக்கும்சேறு பூசுபவர்களுக்கும கூடஅதனைச் செய்ய இயலுமானதாக உள்ளது;

ஈ.பி.டி.பீ எப்போதும் மக்கள் நலன்களுக்காகவேசெயற்பட்டு வந்துளளது. இனியும் அவ்வாறு தான் செயற்படும். எனவே அதனை பலப்படுத்த வேண்டியது மக்கள் கடமை என்றார். (க)

---

### தினசரி தியானம்

## நிலை

தேடாத தேடினரே செங்கைத் துலாக்
கோல்போல்
வாடாச் சமநிலையில் வாழ்வார் பரா பரமே

**தாயுமானவர்**

எனது உடல் வாழ்க்கை தேர் ஓட்டத்துக்கு ஒப்பானது. தேர் நிலைக்கு வருவது போன்று இறைவா, உன்னை அடையுங்கால் நான் நிலைக்கு வந்தவனாகிறேன்.

ஒவ்வொரு பொருளுக்கும் உற்ற நிலையுண்டு. தனது நிலையை அடையும் வரையில் எப்பொருளுக்கும் ஓய்வில்லை. நீரானது கடலைப்போய் அடையும் வரையில் அதற்கு நிலை தடுமாற்றமே நிகழ்கிறது.மனிதன்தெய்வத்தை அடையும் வரையில் அவன் நிலை தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருக்கிறான்;

**ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.**

---

### காணாமற்போனோர் பற்றிய

# விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து 1996,97 ஆம் ஆண்டு காலப பகுதிகளில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப பிரிவினர் பின்வரும் காணாமற் போனவர்களின் உறவினர்கள் மற்றும் சாட்சிகள், கிராம சேவகர்களை உடன் யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துளளனர்;

★ வில்பிரட்டர் நிக்ஸ்சன் ஜெராட் கோ இல;(டி ஐ.ஜி-சி; ஐ; டி- 3364 -1) நெடுங்குளம பிள்ளையார்கோவிலடி யாழ்ப்பாணம்;

★ ஜே-61 கிராமசேவகர் மகாலிங்கத்திற்கு அழைப்பு,

★ பூபதி அரவிந்தன் (கோ. இல. பி. ஜ. 09/61 )3 ஆம் குறுக்குத் தெரு, சிங்கராசர் வீதி,யாழ்ப்பாணம்,ஜே-257 கிராமசேவகருக்கு அழைப்பு

★ கந்தையா சிறிகரன் (கோ .இல.பீ-73) மட்டுவில் சாவகச்சேரிமுறைப்பாடு:- இ; கணேசமூர்த்தி முகமாலை எழுதுமட்டுவாழ் சாட்சி:- அனலட்சுமி

★இமானுவேல் மரிய ஜெயசீலன் (கோ : இல. பீ-29) நாவற்குழி கிழக்கு, ஜே-295 கிராமசேவகர் கணேஸ் சிறிகரனுக்கு அழைப்பு குறிப்பு:- குறிபபிட்டபகுதியில்வசிக்கும் கோபாலசிங்கம் ஜீவபாலன் என்பவரையும் கிராமசேவகர் அழைத்து வரவும்.

★ சண்முகநாதன் முருகதாஸ் (கோ . இல. பீ-45) 215/19 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம், முறைப்பாடு:- சண்முகநாதன் ஜீதியலட்சுமி, (உ-10-19)

---

### தென்னிலங்கை

தேர்தல் பணியக அறிக்கைகள் தெரிவிக்கின்றன,

இத்தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியும் பொது ஜன ஐக்கியமுன்னணியும் கூடுதலான முறைப்பாடுகளை பதிவு செய்துளளனர்.

எந்தக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாத நிலையில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதினால் தேர்தல் முடிவுகளின் பின்வன் செயல்கள் மேலும் மோசமடையலாம் எனத்தேர்தல் கண்காணிப்பாளர்கள் கருத்து வெளியிடடுள்ளனர்.(வ)

# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

## தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு

**"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா"**



மாமனிதர் குமார்

தமிழ் நிலத்தில் தொழிற்சாலைகள் பல நிறுவித் தமிழர்க்குத் தொழில் கொடுத்து கடற்றொழில்வளம் பெருக்கி வாழ்வு தந்த வள்ளல் ஜீ ஜீ, தமிழர் சுதந்திரத்திற்காக உயிர் தந்த தியாகப் பெருஞ்சுடா குமார், இவர்கள் காட்டிய இலட்சியவழியில் என்றும் உழைப்போம். நிரந்தர சமாதானத்திற்கும் நிலையான தீர்விற்கும் நாம் என்றும் ஆதரவானவர்களே.



தனிப் பெருந் தலைவர்
**ஜீ. ஜீ.**

★ தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடை நீக்கப்பட வேண்டும்
★ தமிழீழ மக்கள் மீதான பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்பட வேண்டும்.
★ தமிழ்மக்கள் மீதான போக்குவரத்துக்கட்டுப்பாடு நீக்கப்படவேண்டும்
★ தமிழ் மக்கள் மீதான சகல மனித உரிமை மீறல்களும் நிறுத்தப்பட வேண்டும்.
★ அவசரகாலச் சட்டமும், பயங்கரவாத தடைச் சட்டமும் நீக்கப்பட வேண்டும்.
★ தமிழீழ விடுதலைப்புலிகளைத் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்று சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்படவேண்டும்

இவற்றின் மூலமே சமாதானத்தை நிலைநிறுத்த முடியுமென்பதால் இவற்றைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

### உங்கள் பிரதிநிதிகள் என்ற உரிமையுடன்

O எமது தமிழ் மண்ணில் தொழிற்சாலைகளை நிறுவமும், வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும், கடற்றொழில் வளம் பெறவும்
O வலிகாமம் வடக்கு, தென்மராட்சி, தீவகம் வாழ்மக்கள் பயமற்ற சூழலில் சொந்த இடம் மீளவும், வாழவும், தொழில் செய்யவும்
O ஆயுதக் குழுக்களும் அவற்றின் அடாவடித்தனங்களுக்கும் மக்கள் அஞ்சி வாழும் நிலைமாறவும்,
O முட்கம்பி வேலிகளுக்குள் முடங்கி வாழும் நிலைமாறவும்,
O சிறைவாழ்வும், சித்திரவதையற்ற யுகம் பிறக்கவும் கைதானவர்கள் விடுதலை பெறவும்,
O சொந்த மண்ணில் விவசாயம் செய்து வாழவும், சொந்தக் கடலில் மீன் பிடித்து சுகமாக வாழவும்,
O கல்வி மின்சாரம் குடிநீர் வீதிப்போக்குவரத்து சுகாதாரம் வேலை வாய்ப்பு போன்ற பல துறைகளை மேம்படுத்தவும் பாடுபடுவோம்

நாம் சமாதானத்தை உரிமை வாழ்வுடன் கூடிய சமாதானத்தையே நேசிக்கின்றோம்.
நாங்கள் வன்முறையின் வித்துக்கள் அல்ல, ஜனநாயகத்தின் தனிச்சொத்துக்கள்
நெஞ்சினிலே நேர்மை, கொள்கையினிலே பற்று இவை தான் எம் ஆயுதங்கள்
கொஞ்சு தமிழ் மண்ணில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் இதுவே எம் நிலைப்பாடு
எங்கள் அரசியல் வழி நடத்தலில் என்றுமே மக்கள் பலியானதில்லை
உயிரை உடைமையை இழந்ததில்லை வரலாறு சொல்லும் உண்மை இது
நெஞ்சுக்கு நீதியெனப் பட்டதைச் சொல்லும் அரசியல் தலைமை எம்முடையதே

**சுதந்திரம், சுயமரியாதை, சுயநிர்ணய உரிமை, சுபீட்சம்**
**சமாதானம் சாந்தி நிலவ என்றும் உழைப்போம்**
**ஒற்றுமையே தமிழர் பலம்**

**திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி**

1

**திரு. சி. வி. கந்தையா சிவஞானம்**

5

**திரு கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்**

8

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

| ☒ | 2 | 3 | 4 | ☒ | 6 | 7 | ☒ | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**மாமனிதரின் கட்சிக்கே உங்கள் மூன்று விருப்பு வாக்குகளும்**

**உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களித்து கூட்டமைப்பின் அமோக வெற்றியையும் உறுதிப்படுத்துங்கள்**

(3946)

வாழ்க தமிழ் வளர்க தமிழ்த் தேசிய உணர்வு

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.